

இன்றைய செய்தி நாளைய வரலாறு

# முரசொலி

Murasoli

www.murasoli.in facebook.com/murasoli180 twitter.com/murasoli180 நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி instagram.com/murasoli180 youtube.com/murasoli180 murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 81 – ஒலி : 282 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – வைகாசி 09 – செவ்வாய்க்கிழமை 23 மே 2023 – திருச்சி ★ ★ 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 81 - Issue 282 : Thiruvalluvar Year - 2054 - Vaikasi 09 - Tuesday 23 May 2023 - Trichy ★★ 8 Pages ₹ 5.00


## ஒரு நூற்றாண்டுகால திராவிட இயக்க வரலாற்றில் முக்கால் நூற்றாண்டுகாலப் பங்களிப்பாளரின் புகழைப் பரப்புவோம்!

# ஆண்டு முழுதும் கலைஞர் நூற்றாண்டு விழா!


## தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் நடைபெற்ற கழக உயர்நிலை செயல் திட்டக் குழுக் கூட்டத்தில் தீர்மானம்!



தமிழ்நாடு முதலமைச்சரும், கழகத் தலைவருமான மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையில் நேற்று முன்தினம் (21.5.2023) சென்னை, அண்ணா அறிவாலயத்தில் திராவிட முன்னேற்றக் கழக உயர்நிலை செயல் திட்டக் குழுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், கழகப் பொதுச் செயலாளரும், நீர்வளத்துறை அமைச்சருமான துரைமுருகன், கழக பொருளாளரும், நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவருமான டி.ஆர்.பாலு, கழக முதன்மைச் செயலாளரும், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சருமான கே.என். நேரு, துணைப் பொதுச் செயலாளர்கள் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் இ.பெரியசாமி, உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி, நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆ.ராசா, கனிமொழி கருணாநிதி, அந்தியூர் செல்வராஜ், அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி மற்றும் அமைச்சர் பெருமக்கள் உயர்நிலை செயல் திட்டக் குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

சென்னை, மே 23-

**தமிழ்நாடு முதலமைச்சரும், கழகத் தலைவருமான மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையில் நேற்று முன்தினம் (21.5.2023) சென்னை, அண்ணா அறிவாலயத்தில் திராவிட முன்னேற்றக் கழக உயர்நிலை செயல் திட்டக் குழுக் கூட்டம் நடைபெற்றது. ஒரு நூற்றாண்டுகால திராவிட இயக்க வரலாற்றில் முக்கால் நூற்றாண்டுகாலப் பங்களிப்பாளர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் புகழைப் பரப்புவோம் என்றும், ஆண்டு முழுவதும் கலைஞர் நூற்றாண்டு விழாவை சிறப்பாகக் கொண்டாடுவோம் என்றும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.**



கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில், நேற்று முன்தினம் (21.5.2023) தி.மு.க. உயர்நிலை செயல்திட்டக் குழுவின் கூட்டம் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் விவரம் வருமாறு:-

### தமிழே உயிராக வாழ்ந்த ஓய்வில்லாச் சூரியன்!

தமிழே உயிராக, தமிழினமே உணர்வாக, தமிழர் நலனும் - தமிழ்நாட்டின் வளர்ச்சியுமே வாழ்நாள் செயல் திட்டமாகக் கொண்ட ஓய்வில்லாச் சூரியன்; தனது 94 ஆண்டு ஆயுட்காலத்தில் 80 ஆண்டுகால பொது வாழ்க்கைக்குச் சொந்தக்காரர்; ஒரு நூற்றாண்டுகால திராவிட இயக்க வரலாற்றில் முக்கால் நூற்றாண்டுகாலப் பங்களிப்பாளர்; அரை நூற்றாண்டு காலம் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவராக இருந்து தமிழ்நாட்டு அரசியலின் அச்சாணியாகச் செயல்பட்டவர்; களம் கண்ட 13 தேர்தல்களிலும் வெற்றி கண்ட சாதனையாளர்; ஐந்து முறை தமிழ்நாட்டின் முதலமைச்சராகப் பொறுப்பேற்று மாநிலத்தின் ஒவ்வொரு குடும்பத்திற்கும் நலன் விளைவிக்கும் திட்டங்களை வழங்கியவர்; இந்திய ஜனநாயகக் காவலராகத் திகழ்ந்த மூத்த அரசியல் தலைவர்; இலக்கியம் - கவிதை -இதழியல் - நாடகம் - திரைப்படம் எனத் தொட்ட துறைகள் அனைத்திலும் வெற்றி முத்திரை பதித்த பன்முகத்திறன் கொண்ட படைப்பாளர்; திருக்குவளையில் பிறந்து - திருவாரூரில் வளர்ந்து - உலகெங்கும் வாழும் தமிழர்களின் நெஞ்சங்களில் நிறைந்த நம் 'தமிழினத் தலைவர்' கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா 2023 சூன் 3ஆம் நாள் தொடங்குகிறது.

### நூற்றாண்டு விழாவை எழுச்சியோடு கொண்டாடுவோம்!

நூற்றாண்டு நாயகர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பன்முக ஆற்றலையும், அவர் படைத்தளித்த மக்கள் நலன் திட்டங்களையும் ஓராண்டு முழுவதும் எடுத்துரைத்தாலும் முழுமையடையாது என்றாலும், தமிழ்நாட்டின் வருங்காலத் தலைமுறையினர் அவரை என்றென்றும் நினைவில் கொள்ளும் வகையில் நூற்றாண்டு விழாவினை எழுச்சியோடும் உணர்ச்சியோடும் எங்கெங்கும் நடத்திடக் கழகத்தின் உயர்நிலை செயல்திட்டக் குழுக் கூட்டம் தீர்மானிக்கிறது.

சூன் 3 - அன்று மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் தலைவர்கள் பங்கேற்கும் தமிழினத் தலைவர் கலைஞர் நூற்றாண்டு விழாப் பொதுக்கூட்டம் வடசென்னையில் நடைபெற இருக்கிறது.

### சூன் 20ந் தேதி திருவாரூரில் கலைஞர் கோட்டம் திறப்பு!

சூன் 20-ஆம் நாள் திருவாரூரில் எழிலுற அமைக்கப் பட்டுள்ள கலைஞர் கோட்டத்தினை பீகார் மாநில முதலமைச்சர் நிதிஷ்குமார் அவர்கள் திறந்து வைத்துச் சிறப்பிக்க உள்ளார். இந்த விழா, முழு நாள் நிகழ்வாகக் கவியரங்கம், பட்டிமன்றம், பொதுக்கூட்டம் உள்ளிட்ட பல்வேறு நிகழ்வுகளுடன் சிறப்பாக நடைபெறவிருக்கிறது.

தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினைக் கழக மாவட்டங்கள் ஒவ்வொன்றிலும் மிகச் சிறப்பாகக் கொண்டாடும் வகையில் 2023 சூன் 3 தொடங்கி, 2024 சூன் 3 வரை ஓராண்டு காலத்திற்குத் தொடர்ச்சியான நிகழ்ச்சிகளைத் திட்டமிட்டு நடத்திட வேண்டும். ஒவ்வொரு நிகழ்வும் திராவிட இயக்கத்தின் கொள்கை முழக்கமாகவும், முத்தமிழறிஞர் கலைஞரின் அளப்பரிய சாதனைகளை மக்களின் நெஞ்சில் பதியச் செய்யும் வகையிலும் அமைந்திட வேண்டும்.

தொடர்ச்சி 3 ஆம் பக்கம்

## 24ஆம் தேதி அன்று சிங்கப்பூரில் தமிழ்நாடு முதலீட்டாளர்கள் மாநாடு!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் 350 தொழில் நிறுவனங்களுடன் ஆலோசனை!

**சிங்கப்பூர், மே 23-**

**தமிழ்நாட்டுக்கு தொழில் முதலீடுகளை ஈர்க்கும் வகையில், அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் உலக முதலீட்டார்கள் மாநாடு சென்னையில் நடைபெறும் என முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அறிவித்துள்ளார்.**

அதன்படி, இந்த உலக முதலீட்டாளர்கள் மாநாட்டுக்கு முதலீடுகளை ஈர்க்கும் வகையில், சிங்கப்பூர் மற்றும் ஜப்பான் நாடுகளுக்கு இம்மாதம் 23 ஆம் தேதி முதல், முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் சுற்றுப் பயணம் மேற்கொள்கிறார்.

வரும் 23 மற்றும் 24ஆம் தேதிகளில், சிங்கப்பூரில் பல்வேறு நிகழ்ச்சிகளில் முதலமைச்சர் கலந்து கொள்கிறார்.

மே 24 ஆம் தேதி தமிழ்நாடு முதலீட்டாளர்கள் மாநாட்டில் பங்கேற்கும் முதலமைச்சர், சிங்கப்பூர் இந்திய வர்த்தக மற்றும் தொழில்துறையைச் சேர்ந்த 350 தொழில் நிறுவனங்களுடன் ஆலோசனை நடத்துகிறார்.

சிங்கப்பூர் தொழிலதிபர்களுடனான இந்த சந்திப்பின்போது, தமிழ்நாட்டுக்கு தொழில் முதலீடுகளை ஈர்க்கும் வகையில் பல்வேறு புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகவுள்ளன.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலினின் சிங்கப்பூர் பயணத்தை ஆவலுடன் எதிர்பார்த்து கொண்டிருப்பதாக சிங்கப்பூர் தொழில் நிறுவன கூட்டமைப்பு தலைவர் நெய்ல் பரேக் தெரிவித்துள்ளார்.

### குறுவை சாகுபடிக்காக

## மேட்டூர் அணையில் இருந்து ஜூன் 12ந்தேதி தண்ணீர் திறப்பு!

*மேட்டூர், மே 23 -*

*சேலம் மாவட்டம் மேட்டூரில் காவிரி ஆற்றின் குறுக்கே அமைந்துள்ள ஸ்டான்லி நீர்த்தேக்கம் எனப்படும் மேட்டூர் அணை தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை உள்ளிட்ட டெல்டா மாவட்டங்களின் பாசன ஆதாரமாக விளங்குகிறது. இந்த அணையின் மூலம் தமிழ்நாட்டின் 12 மாவட்டங்களில் உள்ள 17.37 லட்சம் ஏக்கர் பாசன வசதி பெறுகிறது. மேட்டூர் அணையில் இருந்து வழக்கமாக ஒவ்வொரு ஆண்டும் ஜூன் 12ந் தேதி குறுவை சாகுபடிக்காக நீர் திறக்கப்படும்.*

*டெல்டா பகுதி விவசாயிகள் இந்த நீரை நம்பியே குறுவை சாகுபடி செய்வர். கடந்த ஆண்டு மழையால் மேட்டூர் அணை நிரம்பிய நிலையில் ஜூன் 12ந்தேதிக்கு முன்பாகவே அணையில் இருந்து தண்ணீர் திறந்து விடப்பட்டது. மே மாதம் 24 ந்தேதி, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அணையில் இருந்து பாசனத்திற்காக நீரை திறந்துவிட்டார்.*

*மேட்டூர் அணை வரலாற்றிலேயே, கோடை காலத்தில் டெல்டா பாசனத்திற்கு தண்ணீர் திறக்கப்பட்ட நிகழ்வு முதல் முறையாக நிகழ்ந்தது. இது விவசாயிகள் மத்தியில் பெரும் வரவேற்பை பெற்றது. இந்த ஆண்டும் மேட்டூர் அணையில் இருந்து உரிய நாளான ஜூன் 12ந்தேதி டெல்டாவின் குறுவை பாசனத்திற்கு தண்ணீர் திறந்து விடப்படுகிறது.*

### உதகையில் மலர்க் கண்காட்சி!

உதகை, மே 23–

ஊட்டி தாவரவியல் பூங்காவில் 19ஆம் தேதி அன்று மலர்க் கண்காட்சி தொடங்கியது. மலர்க் கண்காட்சியை காண சுற்றுலா பயணிகள் கூட்டம் அலைமோதியது. 3வது நாளாக நேற்று முன்தினம் (ஞாயிற்றுக் கிழமை) காலையிலேயே ஊட்டி தாவரவியல் பூங்காவுக்கு சுற்றுலா பயணிகள் அதிகளவில் வந்தனர். அவர்கள் பூங்காவில் உள்ள மலர் செடிகளை கண்டு ரசித்தனர். இந்த மலர்க் கண்காட்சி இன்று (23ந் தேதி) நிறைவடைகிறது.

## குடியரசுத்தலைவர்தான், புதிய நாடாளுமன்றத்தை திறந்து வைக்கவேண்டும்!

### பிரதமர் திறக்கக் கூடாது என்று ராகுல்காந்தி வலியுறுத்தல்!

*புதுடெல்லி, மே 23-*

*புதிய நாடாளுமன்ற கட்டடத்தை பிரதமர் மோடி திறந்து வைப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்துள்ள காங்கிரஸ் முன்னாள் தலைவர் ராகுல் காந்தி, குடியரசுத் தலைவர்தான் திறந்து வைக்க வேண்டும் என வலியுறுத்தியுள்ளார்.*



*புதிய நாடாளுமன்ற கட்டடத்தை பிரதமர் மோடி வரும் 28ஆம் தேதி திறந்து வைக்க உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தத் திறப்பு விழாவுக்கு குடியரசுத்தலைவர் திரவுபதி முர்முவுக்கு ஒன்றிய அரசு அழைப்பு விடுக்கவில்லை. இந்நிலையில், ஒன்றிய அரசின் இந்த நடவடிக்கைக்கு காங்கிரஸ் கட்சி கண்டனம் தெரிவித்துள்ளது. காங்கிரஸ் முன்னாள் தலைவர் ராகுல்காந்தி வெளியிட்டுள்ள ட்விட்டர் பதிவில், புதிய நாடாளுமன்ற கட்டடத்தை, குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு தான், திறந்து வைக்க வேண்டும் என்று கூறியுள்ளார். பிரதமர் மோடி புதிய நாடாளுமன்ற கட்டடத்தை திறந்து வைக்கக்கூடாது என்றும் ராகுல் காந்தி தெரிவித்துள்ளார்.*